# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 300 | 4 Pages | 3.6.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 300 | 4 பக்கங்கள் | 3.6.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# கருணாநிதி நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை



சென்னை, ஜூன் 3

மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு 101வது பிறந்தநாள் ஆகும். இதையொட்டி சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று காலை 9 மணியளவில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பின்னர் அவர், அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதியின் முழு உருவச் சிலைக்கு காலை 9.15 மணியளவில் மாலை அணிவிக்கிறார். அங்கு கருணாநிதி உருவச்சிலைக்கு கீழே பூக்களால் அலங்கரித்து வைக்கப்படும் உருவப்படத்துக்கு மலர்களை தூவி மரியாதை செலுத்துகிறார்.

இதைத்தொடர்ந்து காலை 9.30 மணியளவில் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்த உள்ளார்.

அதன்பின்னர், தி.மு.க. தலைமை அலுவலகமான சென்னை அண்ணா அறிவாலயத்துக்கு காலை 10 மணியளவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை தருகிறார். அங்கு கருணாநிதி உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். இந்தநிகழ்ச்சிகளில் தி.மு.க. அமைச்சர்களும், மூத்த நிர்வாகிகளும் கலந்துகொண்டு கருணாநிதியின் சிலைக்கும், உருவப்படத்துக்கும் மரியாதை செலுத்த உள்ளனர். கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி தி.மு.க. சார்பில் தொடர் நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் பா.ஜனதா இரட்டை இலக்கத்தில் வெற்றி பெறும்: மத்திய மந்திரி எல்.முருகன்



மதுரை, ஜூன்3

மதுரையில் மத்திய மந்திரி எல்.முருகன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பிரதமர் மோடி சிறுவயதில் இருந்தே ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவர். கடந்த ஆண்டு கூட தேர்தல் முடிந்த பிறகு இமயமலையில் தியானம் செய்தார். தற்போது 3 நாட்களாக கன்னியாகுமரியில் கடும் தவத்தை மேற்கொண்டு வருகிறார். முனிவர் போல தவம் செய்து வருகிறார்.

காங்கிரஸ் இந்தியா கூட்டணியின் தோல்வி உறுதி செய்யப்பட்டு விட்டது. காங்கிரஸ் கூட்டணி 100 சீட் கூட தாண்டாது. அரவிந்த் கெஜ்ரிவால் நாளை ஜெயிலுக்கு போகிறார். தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்தியா கூட்டணி கூட்டத்திற்கு செல்லவில்லை என்ற தகவல் வருகிறது. காங்கிரஸ் கூட்டணியால் எந்த பிரயோஜனமும் இல்லை.

நடிகர் பிரகாஷ்ராஜுக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன சம்பந்தம்? பிரகாஷ்ராஜ் ஒரு நடிகர். கர்நாடகா நடிகர் அவ்வளவு தான். அவருடைய கருத்துகளை நாம் இங்கே பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தமிழ்நாட்டில் பா.ஜனதா வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெறும். இரட்டை இலக்க நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் நரேந்திர மோடிக்கு சமர்ப்பிக்க இருக்கிறோம்.

பாரதிய ஜனதா கட்சிக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் மக்கள் ஒரு பெரிய ஆதரவை கொடுத்துக் கொண்டிருப்பதை இந்தியா முழுவதும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மூன்றாவது முறையாக பிரதமர் நரேந்திர மோடி 400க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்று வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை நடத்த இருக்கிறார்.

இந்தியா முழுவதும் எங்கு பார்த்தாலும், எங்கு சென்றாலும் மக்கள் மோடி, மோடி என்று பெரிய ஆதரவு அலைகளை கொடுக்கிறார்கள். நம் தேசத்தை வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்ற மோடியை மக்கள் பாராட்டுகிறார்கள். மூன்றாவது முறையாக மோடியின் ஆட்சி, 400 தொகுதிகளில் வெற்றி பெறுவது நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வாக்கு எண்ணும் மையங்களில் தி.மு.க. முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்..? அடுக்கடுக்கான அறிவுரைகள்

சென்னை, ஜூன் 3

நாடாளுமன்ற தேர்தல் நாடுமுழுவதும் 7 கட்டங்களாக நடைபெற்று தற்போது நிறைவடைந்துள்ளது. இறுதி கட்ட வாக்குப்பதிவு நேற்று நிறைவு பெற்றதை தொடர்ந்து, வருகிற 4ந்தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில், நாடாளுமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை குறித்து, தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாவட்ட செயலாளர்கள், வேட்பாளர்கள், தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்தாலோசனை கூட்டம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, வாக்கு எண்ணிக்கையின்போது, தலைமை முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது, தி.மு.க. செய்தித்தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் உடன் இருந்தார்.

கூட்டத்தில், வாக்கு எண்ணும் மையங்களுக்கு முகவர்கள், அனைவரும் காலை 6.30 மணிக்குள் செல்ல வேண்டும். வாக்கு எண்ணும் மையங்களுக்குள் தேர்தல் விதிகளின்படி, செல்போன் எடுத்து செல்லக்கூடாது. தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கும்போது, முகவர்கள் மிகவும் கவனமாக, விழிப்புடன் இருக்க வேண்டும்.

தபால் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டு, அதற்கான முடிவுகள் அறிவிக்கும்வரை அதற்காக நியமிக்கப்பட்ட முகவர்கள் அங்கிருந்து வெளியேற கூடாது. வாக்கு எண்ணிக்கையின் போது, ஒவ்வொரு சுற்று தொடங்கும்போதும், ஒவ்வொரு மேஜைகளுக்கு கொண்டு வரப்படும் வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள சீல்கள் சரியாக உள்ளதா என்பதை கவனிக்க வேண்டும்.




மேலும், படிவம் 17சியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குப்பதிவு எந்திரத்தின் எண்ணும், எண்ணிக்கைக்காக கொண்டுவரப்படும் எந்திரத்தின் எண்ணும் ஒன்றாக இருப்பதை உறுதி செய்யவேண்டும். வாக்குப்பதிவு எந்திரத்தின் சீல்களும், வாக்குப்பதிவு எந்திரத்தின் எண்களும் சரியாக இருந்தால் மட்டுமே வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்க வேண்டும்.

வாக்குப்பதிவு எந்திரத்தின் சீல் உடைக்கப்பட்டிருந்தாலோ அல்லது எந்திரத்தின் எண்கள் மாறுபட்டிருந்தாலோ, வாக்கு எண்ணிக்கையை நிறுத்த வலியுறுத்திவிட்டு, முதன்மை முகவர்களிடம் தகவல் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்ற வாக்குகளை, கையேட்டில் குறித்துக் கொள்ள வேண்டும்.

அந்த எண்ணிக்கை, வாக்குப்பதிவு எண்ணிக்கையுடன் ஒத்துப்போகிறதா என்பதை கவனிக்க வேண்டும். வாக்கு எண்ணும் மையத்தில் ஏதாவது முறையீடுகள் இருந்தால், அதுகுறித்து வேட்பாளரோ அல்லது முதன்மை முகவர்களோ உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் எழுத்துபூர்வமாக புகார் தெரிவித்து,

அதற்கான ஒப்புகை சீட்டு பெற வேண்டும். அனைத்து சுற்று வாக்குகளும், ஒப்புகை சீட்டுகளும் எண்ணி முடித்த பிறகே, முகவர்கள் வாக்கு எண்ணும் அறையில் இருந்து வெளியேற வேண்டும் என முகவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## நடிகர் கருணாசிடம் இருந்து 40 துப்பாக்கி குண்டுகள் பறிமுதல்

சென்னை, ஜூன் 3

சென்னையில் இருந்து திருச்சி செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்த முன்னாள் எம்.எல்.ஏ.வும்,

நடிகருமான கருணாசிடம் இருந்து 40 துப்பாக்கி குண்டுகளை பாதுகாப்பு அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். கைப்பையில் 2 பாக்ஸ்களில் இருந்த துப்பாக்கி குண்டுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

உடமைகள் சோதனையில் துப்பாக்கி குண்டுகள் இருப்பது தெரியவந்தது.

தன்னிடம் துப்பாக்கி உரிமம் (லைசென்ஸ்) இருப்பதகாவும், அதற்கான குண்டுகள்தான் இவை என கருணாஸ் விளக்கம் அளித்துள்ளார். விமானத்தில் துப்பாக்கி குண்டுகளை எடுத்துச் செல்லக்கூடாது என்பது தெரியும் என்றும் அவசரமாக புறப்பட்டதால் பையில் இருந்த குண்டுகளை கவனிக்கவில்லை எனவும் அதிகாரிகளிடம் கருணாஸ் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் விமானத்தில் பயணிக்க கருணாசுக்கு அனுமதி மறுத்த பாதுகாப்பு படையினர், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனால் சுமார் அரை மணி நேரம் தாமதமாக திருச்சி விமானம் புறப்பட்டு சென்றது.

நடிகர் கருணாசிடம் 40 துப்பாக்கி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## 49 பெண்களை கொன்று பன்றிகளுக்கு இரையாக்கிய தொடர் கொலையாளி: சிறையில் அடித்துக்கொலை



ஒட்டாவா, ஜூன் 3

கனடாவின் வான்கூவர் நகரில் கடந்த 1990, 2000 காலகட்டத்தில் தொடர்ச்சியாக இளம்பெண்கள் பலர் கொல்லப்பட்டனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் போர்ட் கோக்விட்லாம் பகுதியில் பன்றி பண்ணை நடத்திய ராபர்ட் பிக்டன் (வயது 71) சட்ட விரோதமாக ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்ததாக போலீசுக்கு புகார்கள் சென்றன.

இது குறித்து விசாரணை நடத்துவதற்காக சென்றபோது அவரது வீட்டில் உள்ள பிரிட்ஜில் ஒரு பெண்ணின் உடல் துண்டு, துண்டாக வெட்டி வைக்கப்பட்டு இருந்தது. இதனையடுத்து போலீசார் அவரை கைது செய்து விசாரணை நடத்தினர். அப்போது 49 பெண்களை அவர் வெட்டிக்கொன்றதும், பின்னர் அவர்களது உடலை துண்டு, துண்டாக வெட்டி தனது பண்ணையில் உள்ள பன்றிகளுக்கு இரையாக போட்டதும் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியது.

இதுதொடர்பான வழக்கில் கடந்த 2006ம் ஆண்டு கோர்ட்டு அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. இதனையடுத்து அவர் வான்கூவரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். இந்தநிலையில் ராபர்ட்டுக்கும், சிறையில் உள்ள சக கைதிகளுக்கும் இடையே கடந்த மாதம் 19ந் தேதி மோதல் ஏற்பட்டது. அப்போது கைதிகள் பலர் அவரை சரமாரியாக தாக்கினர். இதனையடுத்துஅவர்சிகிச்சைக்காகஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

## மியான்மரில் வீட்டுச் சிறையில் இருந்த ஆங் சான் சூகியின் கூட்டாளி மரணம்



நேபிடோவ், ஜூன் 3

மியான்மரில் தேசிய ஜனநாயக கட்சியின் இணை நிறுவனர் டின் ஓ (வயது 97). கடந்த 2020ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கட்சி வெற்றி பெற்றது. இந்த தேர்தல் வெற்றிக்கு ஆங் சான் சூகியின் நெருங்கிய கூட்டாளியான இவர் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் தேர்தலில் மோசடி நடைபெற்றதாக கூறி 2021ல் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனையடுத்து ஆங் சான் சூகி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஆனால் டின் ஓவின் உடல்நலம் சரியில்லாததால் அவர் தொடர்ந்து வீட்டுச்சிறையிலேயே இருந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 29ந்தேதி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது மறைவுக்கு அரசியல் பிரமுகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## பாகிஸ்தான்– சீனா இடையே புதிய சரக்கு விமான போக்குவரத்து சேவை

இஸ்லாமாபாத், ஜூன் 3


பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் அரசுமுறை பயணமாக நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) சீனா செல்கிறார். அங்கு 5 நாட்கள் தங்கும் அவர் அதிபர் ஜின்பிங், பிரதமர் லீ கியாங் ஆகியோரை சந்தித்து பேச உள்ளார். இந்த சந்திப்பின்போது இரு தரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து சீனாவின் குய்சோ நகருக்கு புதிய சரக்கு விமான போக்குவரத்து தொடங்கப்பட்டு உள்ளது. இது வாரத்துக்கு 3 முறை இயக்கப்படும் என விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. முன்னதாக கடந்த ஜனவரி மாதம் சீனாவின் ஹூபே பாகிஸ்தானின் லாகூர் இடையே நேரடி விமான சரக்கு போக்குவரத்து தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விண்வெளி உபகரணங்கள் ஏற்றுமதிக்கு சீனா தடை

பீஜிங், ஜூன் 3

விண்வெளிக்கு செயற்கைக்கோள்களை அனுப்புவதில் உலக நாடுகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. இதில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் முன்னணியில் உள்ளன. இந்த நிலையில் விமானம், விண்வெளி உபகரணங்கள், கட்டமைப்பு பாகங்கள், மென்பொருள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை ஏற்றுமதி செய்ய சீனா கட்டுப்பாடுகளை விதிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.



இதுகுறித்து சீன வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேசிய பாதுகாப்பு மற்றும் அணு ஆயுத பரவல் தடை போன்றவற்றிற்காக இந்த தடை விதிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டு உள்ளது. அதேபோல் தைவானுக்கு ஆயுதங்களை விற்ற சில அமெரிக்க நிறுவனங்களுக்கும் சீனா பொருளாதார தடை விதித்துள்ளது.

# வளர்ப்பு நாய் கடித்து 12 வயது சிறுவன் காயம்.. சென்னையில் மீண்டும் சம்பவம்

சென்னை, ஜூன் 3

சென்னை கொரட்டூர் டீச்சர்ஸ் காலனியில் 12 வயது சிறுவன் ஒருவன் சாலையோரம் நடந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது ராட்வீலர் வகை நாயுடன் ஒருவர் சாலையில் வந்துகொண்டிருந்தார். சிறுவனை கண்டதும் அந்த நாய் குரைத்துள்ளது.

இதனால் அச்சமடைந்த சிறுவர் ஓடவே, சிறுவனை துரத்திச்சென்று அந்த நாய் கடித்து குதறியது.

நாய் கடித்ததில் சிறுவனின் முதுகு மற்றும் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து சிறுவனை அவரது தந்தை சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக புழல் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். கடந்த மாதம் நுங்கம்பாக்கத்தில் ராட்வீலர் வகை நாய் கடித்து 5 வயது சிறுமி காயமடைந்த நிலையில் மீண்டும் ஒரு சம்பவம் அரங்கேறியுள்ளது.

# கார் மீது மோட்டார் சைக்கிள் மோதல்: நண்பருடன் கல்லூரி மாணவர் பலியான சோகம்



ஆலந்தூர், ஜூன் 3

சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் லேபர் கிணறு பகுதியை சேர்ந்தவர் ஷாம் ரவி (வயது 19). அதே பகுதியை சேர்ந்த அவரது நண்பர் ரோஹித் (19). இவர், துரைப்பாக்கத்தில் உள்ள கல்லூரியில் பி.ஏ. முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

நண்பர்கள் இருவரும் வேளச்சேரி 100 அடி சாலையில் உள்ள ஒரு ஓட்டலில் சாப்பிட்டு விட்டு பள்ளிக்கரணை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்தனர். மோட்டார் சைக்கிளை ஷாம் ரவி ஓட்டினார். அவருக்கு பின்னால் ரோஹித் அமர்ந்து சென்றார்.

வேளச்சேரி மேம்பாலத்தில் ஏறும்போது, அங்கு அசோக் சொக்கலிங்கம் (49) என்பவர் ஓட்டிவந்த கார் பழுதாகி சாலையின் நடுவே பார்க்கிங் விளக்குகளை எரிய விட்டவாறு நிறுத்தி இருந்தார். இதை கவனிக்காத ஷாம் ரவி, வேகமாக சென்று காரின் பின்பகுதியில் மோதினார். இதில் இருவரும் தூக்கி வீசப்பட்டனர். இருவரும் ஹெல்மெட் அணியாததால் தலையில் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் சரிந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த போக்குவரத்து போலீசார், உயிருக்கு போராடிய 2 பேரையும் மீட்டு ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி 2 பேரும் அடுத்தடுத்து பரிதாபமாக இறந்தனர். ஒரே பகுதியை சேர்ந்த நண்பர்கள் இருவரும் சாலை விபத்தில் ஒன்றாக உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது. இதுபற்றி கிண்டி போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ககன்யான் திட்டத்திற்கான 3ம் கட்ட சோதனை வெற்றி



வள்ளியூர், ஜூன் 3

நெல்லை மாவட்டம் காவல்கிணறு மகேந்திரகிரியில் இஸ்ரோ மையம் செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்து விண்ணில் செலுத்துவதற்கு தேவையான கிரையோஜெனிக் என்ஜின், விகாஷ் என்ஜின், பி.எஸ்.4 என்ஜின் தயாரிக்கப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் கீழ் விண்ணில் செலுத்தப்பட இருக்கும் ராக்கெட்டுகளில் மனிதன் விண்ணிற்கு சென்று விட்டு மீண்டும் பூமிக்கு திரும்புவதற்காக சிஸ்டம் டெமான்ஸ்ட்ரேஷன் மாடல் (SDM) என்ற 'மாடூலிங்' என்ஜின் சோதனை பல்வேறு கட்டங்களாக இங்கு நடந்து வருகிறது.

அதன்படி நேற்று முன்தினம் 3வது கட்டமாக 1,703 வினாடிகள் சோதனை நடத்த இஸ்ரோ திட்டமிட்டது. அதற்கான கவுன்ட்டவுன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த சோதனை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்ததாக இஸ்ரோ வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. இந்த சோதனையை மகேந்திரகிரி இஸ்ரோ மைய இயக்குனர் ஆசீர் பாக்யராஜ் நேரில் பார்வையிட்டார். மேலும் திருவனந்தபுரம் திரவ இயக்க திட்ட மைய இயக்குனர் நாராயணன், ககன்யான் திட்ட இயக்குனர் மோகன் ஆகியோர் திருவனந்தபுரத்தில் இருந்து காணொலி காட்சி மூலமாக பங்கேற்றனர்.

ஏற்கனவே முதல் கட்டமாக 724 வினாடிகளும், 2வது கட்டமாக 324 வினாடிகளும் என்ஜின் சோதனை வெற்றிகரமாக நடந்தது குறிப்பிடத்தக்கது.

# ரெயில் தண்டவாளத்தில் மயங்கி கிடந்த பெண்: என்ஜின் டிரைவர் ரெயிலை நிறுத்தியதால் உயிர் தப்பினார்



சேலம், ஜூன் 4

சேலம் ஜங்ஷன் ரெயில் நிலையத்தில் இருந்து சென்னை எழும்பூருக்கும், மறுமார்க்கத்தில் சென்னை எழும்பூரில் இருந்து சேலத்திற்கும், விருதாச்சலம் மார்க்கத்தில் தினமும் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. அதன்படி சென்னையில் இருந்து ரெயில் புறப்பட்டு சேலத்திற்கு வந்தது. நேற்று காலை 6.35 மணியளவில் டவுன் ரெயில் நிலையத்தை கடந்து சத்திரம் ரெயில் நிலையம் நோக்கி அந்த ரெயில் வந்து கொண்டிருந்தது. அப்போது தண்டவாளத்தில் 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் காயங்களுடன் மயங்கிய நிலையில் கிடந்தார். இதனைப் பார்த்த ரெயில் என்ஜின் டிரைவர்(லோகோ பைலட்) எஸ்.கே.சின்கா சாமர்த்தியமாக செயல்பட்டு ரெயிலை நிறுத்தினார். அந்த பெண் விழுந்த இடத்திற்கு 20 அடிக்கு முன்பே ரெயில் நிறுத்தப்பட்டதால் அந்த பெண் உயிர் தப்பினார்.

தொடர்ந்து ரெயிலில் இருந்து இறங்கிய ரெயில் என்ஜின் டிரைவர் சின்கா, ரெயில்வே அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். பின்னர் அவர்கள் அந்த பெண்ணை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அதன்பிறகு சுமார் 20 நிமிடம் தாமதமாக ரெயில் அங்கிருந்து புறப்பட்டு சென்றது. இதுகுறித்து தகவல் அறிந்த சேலம் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் அவர்கள் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று அந்த பெண்ணிடம் விசாரணை நடத்தினர். அதில் அவர் சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதும், தனது பெயர், ஊர் விவரத்தை தெரிவிக்கமுடியாதநிலையில் இருப்பதும் தெரியவந்தது.

ஆனால் அந்த பெண்ணின் கையில் ராமசாமி ராணி என பச்சை குத்தியிருந்தார். மேலும் அப்பெண் அரசு ஆஸ்பத்திரி பகுதியில் சுற்றித் திரிந்து வந்துள்ளார்.

தண்டவாளத்தை கடந்து சென்றபோது அந்த பெண் தடுக்கி விழுந்ததில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அந்த பெண்ணுக்கு ஆஸ்பத்திரியில் தொடர்ந்துசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது.

தண்டவாளத்தில் பெண் மயங்கி விழுந்து கிடந்ததை பார்த்து உடனடியாக ரெயிலை நிறுத்தி உயிரை காப்பாற்றிய ரெயில் என்ஜின் டிரைவர் சின்காவுக்கு பொதுமக்கள், ரெயில்வே அதிகாரிகள் பாராட்டு தெரிவித்தனர்.

# திருவண்ணாமலையில் குவிந்த பக்தர்கள் கூட்டம்; 4 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம்




திருவண்ணாமலை, ஜூன் 3

திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குகிறது. இந்த கோவிலுக்கு தினமும் உள்ளூர் மட்டுமின்றி வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தாிசனம் செய்து வருகின்றனர்.

அந்த வகையில் இன்று ஞாயிறு விடுமுறையை முன்னிட்டு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். கோடை வெயிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில், சுமார் 4 மணி நேரத்திற்கும் மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். வெயில் தாக்கத்தில் இருந்து பக்தர்களை பாதுகாக்க, தேங்காய் நார் விரிப்புகள் விரிக்கப்பட்டு, அதில் தண்ணீர் ஊற்றி நடந்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

# நீலகிரி: நடு ரோட்டில் மரக்கிளைகளை போட்டு யானைகள் அட்டகாசம்



நீலகிரி, ஜூன் 3

நீலகிரியில் காட்டு யானைகள் ஒருசில நேரங்களில் சாலைகள், விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வலம் வருகின்றன.

அவ்வாறு வரும் யானைகளை வனத்துறையினர் வனப்பகுதிக்குள் விரட்டி வருகின்றனர்.

இந்த நிலையில், நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகேயுள்ள மூலக்கடை பகுதியில் 2 காட்டு யானைகள் சாலையில் முகாமிட்டன. அப்போது அங்கிருந்த மரக்கிளைகளைஉடைத்து சாலையில் போட்டு, அதில் இருந்த இலைகளை சாப்பிடத் தொடங்கின.

தொடர்ந்து சாலையை விட்டு விலகாமல் யானைகள் அப்பகுதியை ஆக்கிரமித்து நின்றுகொண்டிருந்ததால் அய்யன்கொல்லி சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அரை மணி நேரத்திற்கு பிறகு யானைகள் மனம் மாறி காட்டுக்குள் சென்ற பின்னர் வாகன ஓட்டிகள் தங்களது பயணத்தை தொடர்ந்தனர்.

# ஸ்ட்ரெச்சர் தராமல் அலைக்கழிப்பு.. தாயை சக்கர நாற்காலியில் அமர வைத்து தள்ளிச்சென்ற மகன்



ஈரோடு, ஜூன் 3

ஈரோடு பெரியவலசு பகுதியை சேர்ந்த 80 வயது மூதாட்டி சொர்ணம் என்பவர் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த சில நாட்களுக்கு முன்பு ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வந்தார். அப்போது சொர்ணத்தை விபத்து மற்றும் அறுவை சிகிச்சை பிரிவுக்கு அழைத்து செல்லுமாறு டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து மூதாட்டி சொர்ணத்தை அழைத்து செல்ல சக்கர நாற்காலி மற்றும் தூக்குபடுக்கை வழங்கப்படாததால் அவரது மகள் வளர்மதி தனது தாயை கையில் தூக்கிக்கொண்டு அவசர சிகிச்சை பிரிவுக்கு செல்லும் வீடியோ காட்சிகள் வெளியாகி வைரலானது.

அதைத்தொடர்ந்து ஆஸ்பத்திரி கண்காணிப்பாளர் மற்றும் உறைவிட டாக்டர் ஆகியோருக்கு மாவட்ட மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குனர் அம்பிகா சண்முகம் நோட்டீஸ் வழங்கினார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று முடிந்த நிலையில் இனி இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக இணை இயக்குனர் தெரிவித்து இருந்தார்.

இந்தநிலையில் மீண்டும் இதேபோன்ற ஒரு சம்பவம் ஈரோடு அரசு ஆஸ்பத்திரியில் நடைபெற்று இருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியை சேர்ந்த தறிப்பட்டறை தொழிலாளி கதிர்வேல் என்பவர் கடந்த 3 நாட்களுக்கு முன்பு 60 வயதான தனது தாய் குமுதாவை, கால் புண் சிகிச்சைக்காக ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்துள்ளார்.

அப்போது தாய் குமுதாவிற்கு சர்க்கரை அதிகமாக இருந்ததால், அவரது கால் புண்ணை சிகிச்சை செய்வதில் சிரமம் ஏற்பட்டது. இதையடுத்து நேற்று அறுவை சிகிச்சை தியேட்டருக்கு அழைத்து சென்று சுத்தம் செய்ய திட்டமிட்ட நிலையில், குமுதாவை அழைத்து செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

சக்கர நாற்காலி மற்றும் ஸ்ட்ரெச்சரில் அழைத்து செல்லக்கோரி ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் நீண்ட நேரம் போராடியும், அவர்கள் யாரும் முன்வராததால், குமுதாவின் மகன் கதிர்வேல் தாயை சக்கர நாற்காலியில் அமர வைத்து சிரமப்பட்டு அழைத்து சென்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோல சர்க்கரை நோய் காரணமாக தாயின் உடலில் உள்ள வேறு ஏதேனும் உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளதா என கண்டறிய ஸ்கேன் மையத்துக்கு அழைத்து செல்வதிலும், இதே சிரமம் ஏற்பட்டதாக கதிர்வேல் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஆஸ்பத்திரிக்கு தொடர்பில்லாத ஒருவர் சக்கர நாற்காலியில் அழைத்துவர நோயாளிகளிடம் இருந்து ரூ.5 முதல் ரூ.20 வரை பெற்றுக்கொண்டதாகவும் புகார் எழுந்துள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்ஸ்டாகிராம் காதலனுடன் நர்சிங் மாணவி ஓட்டம்

வேலூர், ஜூன் 3

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை மாராகுடியை சேர்ந்தவர் 18 வயது இளம்பெண். இவர் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக்கல்லூரியில் பி.எஸ்சி., நர்சிங் முதலாம் ஆண்டு படித்து வந்தார்.

இவர் கடந்த 30ந் தேதி மதியம் கல்லூரி இடைவேளையில் வெளியே சென்றார். ஆனால் மீண்டும் கல்லூரிக்கு திரும்பவில்லை. இரவு நீண்ட நேரம் ஆகியும் விடுதிக்கும் அவர் வரவில்லை. இதையடுத்து சக மாணவிகளிடம் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ரகுபதி விசாரணை நடத்தினார்.

அப்போது அவருக்கு சேலத்தில் இன்ஸ்டாகிராம் நண்பர் இருப்பதும், இருவருக்கும் காதல் ஏற்பட்டு அடிக்கடி அவருடன் பேசுவதும், அவருடன் சென்றிருக்கலாம் என்பதும் தெரிய வந்தது. இதுதொடர்பாக கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ரகுபதி வேலூர் தாலுகா போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மாயமான மாணவியை தேடி வருகின்றனர்.

இந்த சம்பவம் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பள்ளியிலேயே மாணவ, மாணவிகளுக்கு வங்கி கணக்கு: பள்ளிக்கல்வித்துறை அறிவிப்பு

சென்னை, ஜூன் 3

மாணவ மாணவிகளுக்கு வங்கி கணக்குகளை பள்ளிகளிலேயே தொடங்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை சுற்றறிக்கை அனுப்பி உள்ளது. அந்த சுற்றிக்கையில்,

1ம் வகுப்பு முதல் 12ம் வப்பு வரை படிக்கும் அனைத்து மாணவர்களும் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக உதவி தொகைகள் மற்றும் ஊக்க தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த உதவித்தொகைகள் மாணவமாணவிகளுக்கு குறித்த நேரத்தில் நேரடியாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் மாணவமாணவிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக பணம் செலுத்திடும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு வங்கி கணக்கு கட்டாயம் தேவைப்படுவதால் இந்த சுற்றறிக்கை அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.அந்தந்த பகுதியில் உள்ள தலைமை ஆசிரியர்கள், முதல்வர்களின் மேற்பார்வையில் வங்கி கணக்குகள் தொடங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்ஸ்டாகிராம் காதலன் பேசாததால் 16 வயது சிறுமி தூக்குப்போட்டு தற்கொலை

திருச்சி, ஜூன் 3

திருச்சி பாலக்கரை சங்கிலியாண்டபுரத்தை சேர்ந்த தம்பதியின் 16 வயதுடைய மகள் கடந்த 2½ ஆண்டுகளாக இன்ஸ்டாகிராம் மூலம் காஞ்சீபுரத்தை சேர்ந்த வாலிபர் ஒருவரை காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக அந்த வாலிபர், சிறுமியிடம் பேசாமல் இருந்து வந்துள்ளார். இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த அந்த சிறுமி சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்குப்போ ட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பாலக்கரை போலீசார் சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இன்ஸ்டாகிராம் காதலன் பேசாததால் 16 வயது சிறுமி தூக்கு ப்போட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

# எழும்பூர் பகுதியில் 3 நபர்களை ஆட்டோவில் கடத்திச் சென்று பணம் பறித்த இருவர் கைது

சென்னை, ஜூன் 3

பீகார் மாநிலத்தைச்சேர்ந்த நல்ஷாத் ஆலம், வ/24, த/பெ.குலாம் முஸ்தபா அன்சாரி என்பவர் தனது நண்பர்கள் அமர்குமார், முகமது மஞ்சூரி, அத்தர்பிகுமார் மஞ்சித் தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில் உள்ள பவர் பிளான்டில் வேலை செய்து வந்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் தங்களது சொந்த ஊர் பீகார் சென்றுவிட்டு மதியம் சென்னை வந்துள்ளனர். பின்னர் மேற்படி நபர்கள் திருச்செந்தூர் செல்வதற்காக எழும்பூர் இரயில் நிலையம் அருகே நின்று கொண்டிருந்த போது, நல்ஷாத் ஆலம் அருகில் உள்ள ஓட்டலுக்கு சாப்பிட சென்றுள்ளார், அப்போது ஆட்டோவில் வந்த 2 நபர்கள், அங்கு நின்று கொண்டிருந்த அமர்குமார், முகமது மஞ்சூரி, அத்தர்பிகுமார் மஞ்சித் ஆகிய 3 நபர்களை மிரட்டி ஆட்டோவில் வலுக்கட்டாயமாக ஏற்றி அம்பத்தூர் பகுதிக்கு கடத்திச்சென்று மூலம் ரூ.15 ஆயிரம் பெற்றுள்ளனர். மேலும் செல்போன் ஒன்றையும் பறித்துக்கொண்டு, 3 நபர்களையும் சென்ட்ரல் இரயில் நிலையம் அருகே இறக்கிவிட்டுள்ளனர். இது குறித்து நல்ஷாத் ஆலம் 2 எழும்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து ளவிசாரணை மேற்கொள்ளப்பட்டது. 2 எழும்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட 1.முருகன், வ/30, த/பெ.காசி, பெருமாள் கோயில் தெரு, மணலி சின்ன மாத்தூர், சென்னை 2.குரு, வ/22, த/பெ.நாகராஜ், பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து பணம் ரூ.15,000/, 2 செல்போன்கள், 1 கத்தி மற்றும் 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

# இந்திரா மருத்துவமனையும் அப்போலோ மருத்துவமனையும் இணைந்து சிகிச்சை அளிக்க முடிவு




வேலூர், ஜீன் 03

காட்பாடியில் உள்ள இந்திரா மருத்துவமனை மற்றும் அப்போலோ மருத்துவமனை இரண்டும் இணைந்து நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடிவு செய்துள்ளனர் இது குறித்து அப்போலோ மருத்துவமனையின் முதன்மை அதிகாரி டாக்டர் நவீன் இந்திரா மருத்துவமனை இயக்குனர் டாக்டர் சங்கர் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

அப்போலோ மருத்துவமனையும் இந்திரா மருத்துவமனையும் சேர்ந்து மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் அளிப்பது என முடிவு செய்துள்ளோம் எல்லா வித நோய்க்கும் சிகிச்சை அளிக்க நாங்கள் இணைந்து செயல்பட உள்ளோம் எல்லாவித நோய்க்கும் இங்கு முழு உடல் பரிசோதனை செய்யப்படும் அப்போபோலோ மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை செய்ய என்ன கட்டணம் வசூலிக்கிறார்களோ அதையே இந்திரா மருத்துவமனையிலும் வாங்கப்படும் மேலும் நோயாளிகளின் வீட்டிற்கு நேரில் சென்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டு முழு உடல் பரிசோதனையும் துல்லியமாக செய்து 24 மணி நேரத்தில் முடிவுகள் வழங்கப்படும் ஒவ்வொரு வீட்டிலும் நீரழிவு கொலஸ்ட்ரால் போன்ற நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் இதற்கு போதிய சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் இளம் வயதிலேயே பக்கவாதம் போன்ற நோய்களுக்கு ஆளாக வேண்டி இருக்கும் அந்த பாதிப்பை முன்கூட்டியே தடுத்து உயிர்களை காப்பாற்றும் வகையில் அதி நவீன புதிய மருத்துவ பரிசோதனை எந்திரங்கள் இங்கே நிறுவப்பட்டுள்ளது

இந்த பரிசோதனைகள் இந்திரா மருத்துவமனையில் தற்போது நடைமுறையில் உள்ளன என டாக்டர் நவீன் டாக்டர் சங்கர் ஆகியோர் தெரிவித்தனர்

# 6 மாத குழந்தையை பெட்ரோல் ஊற்றி எரித்துகொன்று தாய் தற்கொலை



சிவகங்கை, ஜூன் 3

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ளவலையப்பட்டியை சேர்ந்தவர் முருகன் (வயது 38). இவர் நிலங்களுக்கு கம்பி வேலி அமைக்கும் வேலை செய்து வருகிறார். இவருடையமனைவி அழகு மீனா (34). இவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. வேதாஶ்ரீ என்ற 6 மாத பெண் குழந்தை இருந்தது.

இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் குழந்தை வேதாஶ்ரீ அழுது கொண்டே இருந்ததாக கூறப்படுகிறது. டாக்டர்களிடம் காண்பித்தும் பலன் இல்லை என தெரிகிறது. தொடர்ந்து குழந்தை அழுது கொண்டே இருந்ததால் அழகுமீனா கவலையுடன் காணப்பட்டாராம்.

இதையடுத்து நேற்று அதிகாலை 3 மணியளவில் அழகுமீனா, தனது 6 மாத குழந்தையுடன் வீட்டின் அருகில் உள்ள கண்மாய் பகுதிக்கு சென்றார். அப்போது அவர் பெட்ரோலை எடுத்து சென்றார். பின்னர் அழகுமீனா தன் மீதும், குழந்தை மீதும் பெட்ரோல் ஊற்றி தீ வைத்தார். தீ உடல் முழுவதும் பரவி குழந்தையும், அவரும் வலியால் அலறினர்.

இந்த சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு ஓடி சென்று இருவரையும் மீட்டு சிகிச்சைக்காக திருப்புவனம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை வேதாஶ்ரீ பரிதாபமாக இறந்தது. அழகு மீனா மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது குறித்து திருப்புவனம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இந்த சம்பவம் குறித்து சிவகங்கை ஆர்.டி.ஓ.வும் விசாரணை நடத்துகிறார். இந்த சம்பவம் திருப்புவனம் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கருணாநிதியின் பிறந்த தினத்தையொட்டி 5 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகங்கள்: செயலாளர் வழங்கினார்



தென்காசி, ஜூன்3

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பிறந்த தினத்தையொட்டி 5 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகங்களை கேரள மாநில அமைப்பாளர் முருகேசன் தலைமையில், முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ.சிவபத்மநாதன் வழங்கினார்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த தின விழா கேரள மாநில திமுக சார்பில் ஜூன் மாதம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்படவுள்ளது. இதன் தொடக்க நிகழ்ச்சியாக கொல்லம் மாவட்டம், புனலூர் பவர் ஆபீஸ் அருகில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நிகழ்ச்சிக்கு கேரள மாநில திமுக அமைப்பாளர் முருகேசன் தலைமை வகித்தார். புனலூர் திமுக நிர்வாகிகள் கிரீஸ் குமார், ரினுராஜன், ஜிஜோ, அஜ்மல், ஷாம்லால், ஷாலினி, சுபலட்சுமி, துரை பேச்சிமுத்து, முகமது ஷாபி, வழக்கறிஞர் அருள்ஜோதி, சுலைமான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொல்லம் மாவட்ட செயலாளர் ரெஜீராஜ் வரவேற்றார்.

முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வக்கீல் பொ. சிவபத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கருணாநிதியின் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கேரள நிர்வாகிகள் சார்பில் கருணாநிதி பிறந்த தினத்தையொட்டி கேக் வெட்டப்பட்டது. தொடர்ந்து 300 மாணவ, மாணவிகளுக்கு தலா 5 நோட்டு புத்தகங்கள் வீதம் முன்னாள் மாவட்ட செயலாளர் வக்கீ;ல் சிவபத்மநாதன், மற்றும் கேரள மாநில அமைப்பாளர் முருகேசன் வழங்கினர். தொடர்ந்து மாவட்டம் முழுவதும் 5 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு கேரள நிர்வாகிகள் நோட்டு புத்தகங்களை வழங்கவுள்ளனர்.

முன்னதாக மாற்றுத் திறனாளிகளுக்கான அத்தலிடிக்ஸ் போட்டியில் இந்திய அளவில் தங்கப் பதக்கம் வென்ற ஶ்ரீராம் என்பவரை பாராட்டி பொன்னாடை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து 9, 10, 11, 12 ம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் எடுத்த மாணவிகள் பாராட்டி பொன்னாடை அணிவித்து ஊக்கத்தொகையினை சிவபத்மநாதன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக நிர்வாகிகளான மாவட்ட துணைச்செயலாளரும். மாவட்ட கவுன்சிலருமான க.கனிமொழி, கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய செயலாளர் க.சீனித்துரை, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ. சாமித்துரை, ரவிச்சந்திரன், கீழப்பாவூர் பேரூர் செயலாளர் ஜெகதீசன், ஆலங்குளம் பேரூராட்சி மன்ற தலைவர் சுதா மோகன்லால், முன்னாள் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் மேகநாதன், மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் இட்லி செல்வன், தொண்டரணி தலைவர் வெங்கடேசன், வக்கீல் முருகன், ஊராட்சி மன்ற தலைவர் முருகன், ஒன்றிய கவுன்சிலர் தர்மராஜ், மாவட்ட பிரதிநிதிகள் ஸ்டீபன் சத்தியராஜ், அன்பழகன், அய்யன்சாமி, கூட்டுறவு சரவணன், வார்டு செயலாளர் வேல் அய்யப்பன், முன்னாள் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சண்முகசுந்தரம் (எ) தினேஷ், இளைஞரணி அரவிந்த் திலக், நவீன், வக்கீல் ஹரிகிருஷ்ணன், நிர்வாகிகள் அண்ணாத்துரை, கருணாநிதி, அருணாபாண்டியன், காளிராஜ், திருமலைக்குமார், அருணாசலம், ராசேந்திரன், பால்ராஜ், காசிபாண்டி, துரை பேச்சிமுத்து, துரைசாமி,ஏ.பி.என்.குணா, ராஜபாண்டி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஶ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி கோவில் குடமுழுக்கு பெருவிழா: ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



ஶ்ரீவில்லிபுத்தூர் ஜூன் 3

ஶ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி கோவில் குடமுழுக்கு பெருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் ஹர ஹர மகாதேவா தென்னாடுடைய சிவனே போற்றி என்ற கோஷங்களுக்கு இடையே உற்சாகமாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு உவகை பெரும்பேறு அடைந்தனர். ஶ்ரீவில்லிபுத்தூரில் பாடல் பெற்ற சைவத் திருத்தலம் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோயிலாகும் இங்கு நேற்று (2ந்தேதி) கும்பாபிஷேக பெருவிழா

சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக கடந்த 26 ஆம் தேதி யாகசாலையில் அமைக்கப்பட்டிருந்த யாக குண்டங்களில் சிறப்பு வேள்விகள் பூஜைகள் நடைபெற்றது இதில் நாட்டிலுள்ள புண்ணிய நதி கடல்களில் இருந்து நீர் குடங்களில் எடுத்து வரப்பட்டு யாகசாலை பூஜையில் வைக்கப்பட்டு வேத மந்திரங்கள் பாடப்பட்டன இதனை 108 சிவாச்சாரியார்கள் காலை முதல் இரவு வரை இடைவிடாமல் நடத்தினர் மேலும் கோவில் அர்ச்சர்கள் சிவ ஶ்ரீ ரகுபட்டார் என்ற கைலாச பட்டர் சிவ ஶ்ரீ ரமேஷ் பட்டர் என்ற சுவாமிநாத பட்டர் சிவஶ்ரீ கல்யாண விக்னேஷ் பட்டர் சிவ ஶ்ரீ பாலாஜி பட்டர் சிவஶ்ரீ ஆனந்த விஜய் பட்டர் சிவஶ்ரீ தியாகராஜ பட்ட சிவஶ்ரீ வைத்தியநாதப் பட்டர் ஆகியோர் இணைந்து பூஜைகளை செய்தனர். இதனைத் தொடர்ந்து நேற்று (2ந் தேதி) அதிகாலை யாகசாலை பூஜைகள் நிறைவு பெற்று 7.50 மணிக்கு யாகசாலையில் இருந்து புனித நீர் அடங்கிய குடங்களை சிவாச்சாரியார்கள் மேளதாளம் முழங்க சிவனடியார்களின் கோஷத்திற்கு இடையே கோபுரத்திற்கு கொண்டு சென்றனர். தொடர்ந்து அங்கு சன்னதிக்கு மேல் உள்ள ராஜகோபுரத்தின் ஒன்பது கலசங்கள் அலங்கரிக்கப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. தொடர்ந்து சரியாக 8:05 மணிக்கு ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமான கோபுரங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. கோவில் சிவாச்சாரியார் ரகு என்ற கைலாச பட்டர் கும்பாபிஷேகத்தினை மகுட ஆகம பூஜைகள் முறைப்படி சிறப்பாக நடத்தி வைத்தார். அப்போது வானத்தில் 7 கருடங்கள் வட்டமிட்டு பறந்தது அப்பொழுது கோவில் மேல் தளத்திலும் கோவில் வளாகத்தை சுற்றிலும் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஹர ஹர மகாதேவா தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று விண்ணதிர பக்தி கோசமிட்டனர்.

தொடர்ந்து பக்தர்களின் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. கும்பாபிஷேக பெருவிழாவில் ஶ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் இ எம் மான்ராஜ் மாவட்ட ஊராட்சி தலைவர் வசந்தி மான்ராஜ் மாவட்ட நீதிபதி ஜெயக்குமார் மதுரை அறநிலையத்துறை இணை ஆணையர் க.செல்லத்துரை உதவி ஆணையர் து. வளர்மதி ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ராஜேந்திரன் துணை வட்டாட்சியர் நிர்மல் குமார் அதிமுக வடக்கு ஒன்றிய செயலாளர் குறிஞ்சி முருகன் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயமணி முருகன் கோவில் செயல் அலுவலர்கள் கலா ராணி தேவி ஜோதிலட்சுமி மற்றும் ஏராளமான முக்கிய பிரமுகர்கள் அரசு அலுவலர்கள் திருப்பணி உபயதாரர்கள் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல்வேறு இடங்களிலும் பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானங்கள் வழங்கப்பட்டது. ஶ்ரீவில்லிபுத்தூர் டி.எஸ்.பி முகேஷ் ஜெயக்குமார் தலைமையில் நகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சங்கர் கண்ணன் மற்றும் 600க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கும்பாபிஷேக பெருவிழா ஏற்பாடுகளை மதுரை அறநிலைத்துறை இணை ஆணையர் க.செல்லதுரை உதவி ஆணையர் து. வளர்மதி தக்கார் இரா. இலட்சுமணன் கோவில் செயல் அலுவலர் செ. முத்து மணிகண்டன் மற்றும் திருக்கோவில் திருப்பணி உபயதாரர்கள் கோவில் பணியாளர்கள் ஊழியர்கள் பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர் விழாத் துளிகள்: கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களும் சிவ நாமம் ஓதியவாறு நெற்றி நிறைய திருநீறு பூசி காணப்பட்டனர். கோவிலில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் பல்வேறு அமைப்புகள் காலை முதல் மாலை வரை இடைவிடாமல் அன்னதானம் வழங்கி பசிப்பிணி நீக்கியது கும்பாபிஷேகம் முடிந்த பிறகு முன்னாள் தமிழக முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் அவரது தம்பி ஓ ராஜா மற்றும் அவரது ஆதரவாளர்கள் திரளாகச் சென்று சாமி தரிசனம் செய்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 2006 ஆம் ஆண்டு இந்த கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது அப்பொழுது கூடிய கூட்டத்தை விட நேற்று நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் அதிகளவில் பக்தர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஶ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் இருந்து மாலை கிளி வஸ்திர மரியாதைகள் மடவார் வளாகம் கோவிலுக்கு கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டது தமிழக முழுவதும் இருந்து ஏராளமான சிவனடியார்கள் கும்பாபிஷேகத்தை காண வந்தது குறிப்பிடத்தக்கது.

# திருச்சி மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் ஷோரூமில் கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி மற்றும் விற்பனை துவக்கம்



திருச்சி. ஜூன் 3

கலைநயமிக்க நகைகளின் கண்காட்சி தற்போது மலபார் கோல்டு டைமண்ட்ஸ் திருச்சி ஷோரூமில் நடைபெற்று வருகிறது. தலைசிறந்த நகை வடிவமைப்பாளர்களால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நகைகள் ஒவ்வொன்றும் அந்த கலைஞர்களின் நிபுணத்துவத்தையும் தனிப்பட்ட திறன்களையும், அனைத்து நகைகளிலும் ஒரு கலைநயம் இருக்கிறது என்பதை நிருபிக்கும் வகையிலும் உள்ளன. இந்த கண்காட்சியை ஜோசன் ரஞ்சித் மற்றும் குடும்பத்தினர் (எழுத்தாளர்), திரு. சுரேஷ் மற்றும் திருமதி. சுஜாதா குடும்பத்தினர் (முன்னாள் மேயர்), திரு.ஜி.வீரமணி (அன்பில் ஊராட்சி தலைவர்) ஆகியோர் துவக்கி வைத்தனர். இவர்களுடன் திரு. ஜோசப் பியூஸ் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் திருச்சி கிளை தலைவர்), திரு. ஷேக் தாவூத் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் திருச்சி கிளை துணை தலைவர்), திரு. நந்தலால் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் மேலாண்மை பயிற்சி),திரு. திவாகர் (மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் திருச்சி கிளை வர்த்தக இணை மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர். கலைநயமிக்க இந்த கண்காட்சி கலைகளில் ஆர்வமுள்ளவர்களின் கண்களுக்கு விருந்தாக அமையும். இந்த கண்காட்சி ஜூன் 01 2024 ஆம் தேதி முதல் ஜூன் 09 2024 ஆம் தேதி வரை நடைபெறும். இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ள நகைகளை வாடிக்கையாளர்கள் சிறப்பு விலையில் வாங்கலாம். மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் தற்போது 13 நாடுகளில் 337க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர் கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி ஆகிய நகரங்களில் 26 கிளைகளை கொண்டுள்ளது. மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான எத்தினிக் நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்தகண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனம் பற்றி: நாட்டில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் வர்த்தக குழுமங்களில் ஒன்றான மலபார் குழும நிறுவனங்களின் முன்னணி பிரிவு தான் மலபார் கோல்டு அண்ட் டைமண்ட்ஸ் நிறுவனம் ஆகும். இந்தியா, சிங்கப்பூர், வளைகுடா மற்றும் அமெரிக்க நாடுகளில் சில்லறை விற்பனை பிரிவில் உள்ள இந்த நிறுவனம் பிஐஎஸ் சான்று பெற்ற 916 தங்க நகைகளையும் ஐஜிஐ சான்று பெற்ற வைர நகைகளையும் பிஜிஐ சான்று பெற்ற பிளாட்டின நகைகளையும் வெள்ளி நகைகளையும் விற்பனை செய்கிறது.

அனைத்து நகைகளும் வெளிப்படையான விலை, நிகர எடை, கற்களின் எடை, சேதாரம், கற்களுக்கான விலை, அதன் நிகர எடை ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடும் பட்டியலுடன் வைக்கப்பட்டுள்ளன. இதனால் வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு நகையின் தயாரிப்பு குறித்தும் விலையையும் எளிதாக புரிந்து கொண்டு வாங்குவதற்கு திட்டமிடலாம். வாடிக்கையாளர்கள் வாங்கும் அனைத்து நகைகளுக்கும் ஆயுள் முழுவதும் இலவச பராமரிப்பு, அனைத்து நகைகளையும் எப்போது வேண்டுமானலும் திரும்ப பெற்றுக்கொள்ளும் உத்தரவாதம் உள்ளிட்ட 10 வாக்குறுதிகளை நமது மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனம் வழங்குகிறது. இவை தவிர மலபார் கோல்டு - டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகபொறுப்பும்முக்கியகாரணமாகஉள்ளது. தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என பல்வேறு சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

# அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேர இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்: மாவட்ட கலெக்டர் தகவல்

சேலம், ஜூன் 3


சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேர இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். இது குறித்து மாவட்ட கலெக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:

2024 ம் ஆண்டில் சேலம், சேலம் (மகளிர்), மேட்டூர் அணை மற்றும் கருமந்துறை (பழங்குடியினருக்கு மட்டும்) ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேரவும், பாலாஜி தொழிற்பயிற்சி நிலையம், சங்ககிரி, சேலம் பாலிடெக்னிக் தொழிற்பயிற்சி நிலையம், வேல்ஸ் தொழிற்பயிற்சி நிலையம், மேட்டூர் அணை மற்றும் நாச்சியப்பா தொழிற்பயிற்சி நிலையம், சேலம் ஆகிய தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு பயிற்சியில் சேரவும் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

வெல்டர், பெயிண்டர் (பொது), வயர்மேன், போன்ற பிரிவுகளுக்கு 8ம் வகுப்பிலும் எலக்ட்ரீசியன், ஃபிட்டர், மெசினிஸ்ட், மெசினிஸ்ட் கிரைண்டர், டர்னர், மோட்டார் மெக்கானிக், மெக்கானிக், கணினி இயக்குபவர், கட்டிட படவரைவாளர், மெக்கானிக் மின்னணுவியல், வரவேற்பு கூட அலுவலக உதவியாளர், கம்மியர் கருவிகள், சுருக்கெழுத்து செயலக உதவியாளர், ஆடை தயாரித்தல் பிளம்பர், உணவு தயாரிப்பவர் மற்றும் தொழிற்சாலைகளின் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தொடங்கப்பட்ட 4.0 ல் 1. - 2. - 3. 4. 5. - போன்ற பிரிவுகளுக்கு 10 ம் வகுப்பிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் இது தொடர்பான தகவல்களுக்கு என்ற இணையதளத்தில் பார்க்கவும். மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், கைபேசி எண், , ஆதார் அட்டை மற்றும் முன்னுரிமை கோரினால் முன்னுரிமைச் சான்றிதழ், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் அரசு தொழிற்பயிற்சி நிலையம் சேலம் மற்றும் மேற்கூறிய தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள சேர்க்கை உதவி மையம் மூலமாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பக்கட்டணம் ரூ.50/( / அல்லது மூலம் செலுத்தலாம்).

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை ரூ.750/ பாடநூல், சைக்கிள், சீருடை, வரைபடக் கருவி, காலணி, பஸ் பாஸ் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பெண் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித்தொகை வழங்கப்படும். மேலும் பயிற்சி முடித்த பின் முன்னனி நிறுவனங்களில் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும். மகளிருக்கு குறைந்தபட்ச வயது 14 மற்றும் வயது உச்ச வரம்பு இல்லை. ஆண்களுக்கு வயது வரம்பு 14 முதல் 40 வயது வரை ஆகும். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் பெண் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/ உதவித்தொகை வழங்கப்படும். இணையதளம் வாயிலாக 07.06.2024 வரை விண்ணப்பங்களை பதிவு செய்ய கடைசி நாளாகும். மேலும் விவரங்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையம் வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தை நேரிலோ, 0427 2400329 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட கலெக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்கள்.

## 'அப்பா இயக்கும் படத்தில் நடிப்பது எப்போது?' அதிதி சங்கர் பதில்



இயக்குனர் சங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் கடந்த 1996ம் ஆண்டு வெளியான 'இந்தியன்' படத்தின் 2ம் பாகம் பிரம்மாண்டமான முறையில் தயாராகி வருகிறது. இந்த படத்தில் பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் பிரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

லைகா மற்றும் ரெட் ஜெயன்ட் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். 'இந்தியன் 2' திரைப்படம் வருகிற ஜூலை 12ந்தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை நேரு ஸ்டேடியத்தில் இன்று நடைபெற்றது. இந்த விழாவில் நடிகர் சிம்பு, சிவகார்த்திகேயன், இயக்குனர் லோகேஷ் கனகராஜ், ஹெச். வினோத் உள்ளிட்ட பல்வேறு திரைப்பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் இயக்குனர் சங்கரின் மகளும், நடிகையுமான அதிதி சங்கர் கலந்து கொண்டார். அவரிடம், 'உங்கள் அப்பாவின் இயக்கத்தில் நீங்கள் நடிப்பது எப்போது?' என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்த அவர், "என் அப்பாவைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவரிடம் வாய்ப்பு கேட்டு என்னால் அடம்பிடிக்க முடியாது. எனக்கான கதாபாத்திரம் சரியாக அமைந்தால் நிச்சயமாக அப்பா விரைவில் அவரது படத்தில் என்னை நடிக்க வைப்பார்" என்று தெரிவித்தார்.

## செருப்பு அணியாதபோது மனதுக்கு அமைதி கிடைத்தது என்று விஜய் ஆண்டனி கூறினார்



இசையமைப்பாளராக இருந்து கதாநாயனாக உயர்ந்த விஜய் ஆண்டனி 'பிச்சைக்காரன் 2' படம் மூலம் இயக்குனராகவும் அவதாரம் எடுத்தார்.

சமீபகாலமாக விஜய் ஆண்டனி காலில் செருப்பு அணிவது இல்லை. சென்னையில்நடந்தவிழாக்களில்செருப்புஅணியாமலேயேபங்கேற்றார். தற்போது ஐதாராபாத்தில் நடந்த பட நிகழ்ச்சியொன்றிலும் செருப்பு அணியாமலேயே கலந்து கொண்டார்.

இதுகுறித்து விஜய் ஆண்டனியிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்து விஜய் ஆண்டனி கூறும்போது, "நான் சில நாட்களுக்குமுன்செருப்புஅணியாமல்சுற்றித்திரிந்தேன்.அந்தஅனுபவம் எனக்கு நன்றாக இருந்தது போல் தோன்றியது.

செருப்பு அணியாதபோது மனதுக்கு அமைதி கிடைத்தது. ஆரோக்கியத்துக்கும் அது நல்லதுதான். அது மட்டுமின்றி நமக்குள் தன்னம்பிக்கையைகூட இதுவளர்க்கும்.நான்எப்போதுசெருப்பில்லாமல் சுற்ற ஆரம்பித்தேனோ அந்த சமயத்தில் இருந்து எந்தவித நெருக்கடிக்கும் ஆளாகவில்லை. வாழ்நாள் முழுவதும் செருப்பு அணியாமல் இருக்க விரும்புகிறேன். இது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது'' என்றார்.

## 'இரண்டு குழந்தைகளின் அம்மாவாக நடித்ததால்...' வாணி போஜன்



நீட் தேர்வை மையமாக கொண்டு சுப்புராமன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் அஞ்சாமை. படத்தின் கதாநாயகனாக விதார்த் கதாநாயகியாக வாணி போஜன், கிருத்திக் கணேசன் உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்து வருகிற7ந் தேதி படம் திரைக்கு வர உள்ளது. டிரீம் வாரியர்ஸ் தயாரிப்பு நிறுவனம் படத்தை வெளியிட உள்ளனர். இதையொட்டி சென்னையில் நடந்த விழாவில் நடிகை வாணி போஜன் பேசியதாவது: இந்தப் படத்தில் உயிரைக் கொடுத்து நடித்துள்ளேன். படத்தைரொம்பவும்லவ்பண்ணிஎனக்குகொடுத்தகதாபாத்திரத்தில்நடித்திருக்கிறேன். இரண்டு குழந்தைகளின் அம்மாவாக படத்தில் நடித்ததால் நிறைய பேர் என்னிடம் இனிவரும் படங்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு அம்மா என்ற கதாபாத்திரமாகவே உங்களுக்கு வரும் என்று கூறினார்கள். ஆனால் படத்தின் கதாபாத்திரத்திற்கு ஏற்றார் போல் இந்த படத்தில் நான் நடிக்காமல் இருந்தால் நான் நடிகையாக இருப்பதில் அர்த்தமில்லாமல் போயிருக்கும். நடித்த படங்களில் இந்த படம் எனக்கு ரொம்ப மன நிறைவு உள்ளபடமாகஅமைந்துள்ளது. விதார்த் நல்லநடிகர். ஒவ்வொருகாட்சிகளிலும் அவ்வளவு சிறப்பாக தனது நடிப்பை வெளிப்படுத்துவார். ரேவதிபோல் இருக்க ஆசையா? ரம்பா போல் இருக்க ஆசையா? என்று கேட்கிறீர்கள் நான் வாணி போஜனாகவே இருக்க விரும்புகிறேன், என்றார்.

## சூர்யாவின் 44வது படத்தில் நடிகை பூஜா ஹெக்டே படக்குழு அறிவிப்பு



நடிகர் சூர்யா, சிறுத்தை சிவா இயக்கும் 'கங்குவா' படத்தின் படப்பிடிப்பை முடித்துவிட்டார். அடுத்ததாக அவர் சுதா கொங்கரா இயக்கும் 'புறநானூறு' படத்தில் நடிக்க இருப்பதாக அறிவிப்பு வெளியானது. இதில் துல்கர் சல்மான் , நஸ்ரியா உட்பட பலர் நடிக்க இருந்தனர்.

இந்நிலையில் இந்தப் படத்துக்கு கூடுதல் நேரம் தேவைப்படுவதால் அதைத் தள்ளி வைப்பதாக அறிவித்தனர். இதையடுத்து, சூர்யாவின் 44வது படத்தை கார்த்திக் சுப்புராஜ் இயக்குகிறார். இதற்கான அறிவிப்பு சில வாரங்களுக்கு முன் வெளியானது.

இதை சூர்யாவின் 2டி நிறுவனம் தயாரிக்கிறது. சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு நாளை அந்தமானில் தொடங்குகிறது. அங்கு 40 நாட்கள் தொடர்ந்து படப்பிடிப்பு நடக்க இருக்கிறது. இந்நிலையில் இந்த படத்தில் நடிகை பூஜா ஹெக்டே இணைந்துள்ளதாக படக்குழு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 'இனி நான் 'வேட்டைக்காரி' சஞ்சனா' நடிகை சஞ்சனா சிங்



காளிமுத்து காத்தமுத்து இயக்கத்தில் புதுமுக நடிகர் ராகுல் நடிப்பில் உருவாகியிருக்கும் படம் 'வேட்டைக்காரி'. இதில், கதாநாயகியாக சஞ்சனா சிங் அதிரடி ஆக்சன் வேடத்தில் போலீஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார். வின்செண்ட் செல்வா ,வேலுச்சாமி, கஞ்சா கருப்பு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள்.

ராம்ஜி இசையமைத்திருக்கும் இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் பிரசாத் லேபில் நடைபெற்றது. இதில் சஞ்சனா சிங் பேசுகையில்,

"கவிஞர் வைரமுத்து, வேட்டைக்காரி என்ற சிறப்பான தலைப்பை எனக்கு கொடுத்திருக்கிறார். நான் 15 வருடங்களாக தமிழ்நாட்டில் இருக்கிறேன், ஆனால் எனக்கு சரியாக தமிழ் பேச வராது. இருந்தாலும் நான் அனைத்து இடங்களிலும் தமிழில் தான்பேசுவேன்.

தமிழ் என் உயிர். இனி என்னை 'வேட்டைக்காரி' சஞ்சனா என்று மக்கள் அழைக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். காரணம், நான் முதல் முறையாக ஆக்சன் ஹீரோயினாக இந்த படத்தில் நடித்திருக்கிறேன். இதுவரை 40 படங்களுக்கு மேல் நடித்திருந்தாலும் ஒரு அழகான கிராமத்து பின்னணியில் நடித்த படம் இதுதான். அனைவரும் படம் எடுப்பார்கள். கேரவன் உள்ளிட்ட எந்தவித வசதியும் இல்லாமல் கஷ்டப்பட்டு நடித்திருக்கிறேன். நீங்கள் எங்களுக்கு ஆதரவு கொடுப்பீர்கள் என் என்று நம்புகிறேன், நன்றி. இவ்வாறு கூறினார்.

## 'இனிமேல் அதனால் எனக்கு தடை இல்லை' நடிகை ராஷி கன்னா



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக இருப்பவர் ராஷி கன்னா. தற்போது தமிழில் சுந்தர். சி இயக்கத்தில் ராஷி கன்னா நடித்த படம் அரண்மனை 4. இப்படம் மிகப்பெரிய வெற்றிப்பெற்றது. நேற்று இந்தப் படம் இந்தியில் வெளியானது.

அப்போது நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ராஷி கன்னா பேசும்போது, ''தமிழில் இதற்கு முன் நான் நடித்த 2 படங்கள் வெற்றி பெற்றன. 'அரண்மனை 4' படமும் வெற்றி பெற்றுள்ளதால் இது எனக்கு ஹாட்ரிக் வெற்றி என்று ரசிகர்கள் சொல்கிறார்கள்.

சிறுவயதில் இருந்தே ஹாரர் படங்கள் பிடிக்கும் என்பதால் 'அரண்மனை 4' படத்தில் நடித்தது பெருமையாக இருந்தது. இந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் நடித்து வருகிறேன்.

மொழி புரிந்தால் பார்வையாளர்களுடன் நெருங்க முடியும் என்பது எனக்குத்தெரியும்.என்னால்,இப்போதுதமிழ்,தெலுங்குமொழிகளைப் புரிந்துகொண்டு பேச முடியும். இதனால் இனி மொழி எனக்கு தடையில்லை. சிலபடங்கள்திரையரங்குகளில்சரியானவரவேற்பைப் பெறாவிட்டாலும் இந்தப்பயணத்தில் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன், இவ்வாறு கூறினார்.

## கிங்ஸ் கோப்பை கால்பந்து: இறுதிப்போட்டியில் ரொனால்டோ அணி தோல்வி



49வது கிங்ஸ் கோப்பை கால்பந்து போட்டி சவுதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதிப்போட்டியில் அல் நாசர் அல் ஹிலால் அணிகள் மோதின. அல் நாசர் அணியில் போர்ச்சுகல் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ அங்கம் வகித்ததால் அந்த அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டம் வழக்கமான நேரம் முடிவில் 11 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது. அல் ஹிலால் தரப்பில் அலெக்சாண்டர் மெட்ரோவிச் 7வது நிமிடத்திலும், அல் நாசர் தரப்பில் அய்மான் யாஹா 88வது நிமிடத்திலும் கோலடித்தனர். இதைத் தொடர்ந்து வழங்கப்பட்ட கூடுதல் நேரத்தில் (30 நிமிடம்) இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் சமநிலை நீடித்தது. இதைத்தொடர்ந்து வெற்றி, தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட்அவுட் முறை கடைபிடிக்கப்பட்டது. இதில் அல் ஹிலால் அணி 54 என்ற கோல் கணக்கில் அல் நாசர் அணியை வீழ்த்தி 11வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்த ஆட்டத்தில் அல் நாசர் அணியின் கோல் கீப்பர் டேவிட் ஆஸ்பினா 56வது நிமிடத்தில் கோல் எல்லைப்பகுதிக்கு வெளியே பந்தை கையால் கையாண்டதால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதேபோல் அல் ஹிலால் அணி வீரர்கள் அலி அல் புலாஹி 86வது நிமிடத்திலும், காலிடோ கோலிபாலி 91வது நிமிடத்திலும் முரட்டு ஆட்டம் காரணமாக நடுவரால் சிவப்பு அட்டை எச்சரிக்கைக்கு ஆளாகி நடையை கட்டினர். தான் ஆடிய அணி தோல்வியை சந்தித்ததால் ரொனால்டோ கண்ணீருடன் மைதானத்தை விட்டு வெளியேறினார்.

## ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதி சுற்று: ஜாஸ்மின் கால்இறுதிக்கு முன்னேற்றம்



பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான குத்துச்சண்டை தகுதி சுற்று பாங்காக்கில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்களுக்கான 57 கிலோ எடைபிரிவில் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் ஜாஸ்மின் லம்போரியா 50 என்ற கணக்கில் சுவிட்சர்லாந்தின் அனா மரிஜா மிலிசிக்கை தோற்கடித்து கால்இறுதிக்கு முன்னேறினார். அவர் கால்இறுதி ஆட்டத்தில் வெற்றி கண்டால் ஒலிம்பிக் வாய்ப்பை உறுதி செய்து விடுவார்.

இதன் ஆண்கள் 57 கிலோ எடைபிரிவில் அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் சச்சின் சிவாச் 05 என்ற கணக்கில் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான கார்லோ பாலமிடம் (பிலிப்பைன்ஸ்) பணிந்தார். அவர் இந்த ஆட்டத்தில் தோல்வி அடைந்தாலும் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற இன்னும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. இன்று நடைபெறும் ஆட்டத்தில் சச்சின்முனார்பெக் செய்ட்பெக்கை (கிர்கிஸ்தான்) எதிர்கொள்கிறார். இதில் சச்சின் வெற்றி பெற்றால் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற முடியும்.

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: இரட்டையர் பிரிவில் தமிழக வீரர் ஸ்ரீராம் பாலாஜி 3வது சுற்றுக்கு முன்னேற்றம்



'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் பாரீசில் களிமண் தரையில் நடந்து வருகிறது. இதில் ஆண்கள்இரட்டையர்பிரிவில்நேற்றுநடைபெற்றஇரண்டாவது சுற்றில் இந்திய வீரர் ஸ்ரீராம் பாலாஜி ரியேஸ் வரேலா மார்ட்டினஸ் (மெக்சிகோ) ஜோடி, பிரான்சின் டேன் ஆடட் தியோ அரிபேஜ் ஜோடியுடன் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஸ்ரீராம் பாலாஜி ரியேஸ் வரேலா ஜோடி 64, 36, 62 என்ற செட் கணக்கில் டேன் தியோ ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்று 3வது சுற்றுக்கு முன்னேறியது.

## புரோ ஆக்கி லீக்: ஜெர்மனியை வீழ்த்தி இந்தியா வெற்றி

9 அணிகள் இடையிலான 5வது புரோ ஆக்கி லீக் போட்டி பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது. இதில் லண்டனில் நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் உலக தரவரிசையில் 5வது இடத்தில் இருக்கும் இந்திய அணி, உலக சாம்பியன் ஜெர்மனியை சந்தித்தது. இதில் தொடக்கத்தில் சற்று நேரம் ஆதிக்கம் செலுத்திய ஜெர்மனி அணியால் அந்த உத்வேகத்தை தொடர முடியவில்லை. அபாரமாக செயல்பட்ட இந்திய அணி 30 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தியது.


இந்திய அணியில் கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் (16வது நிமிடம்), சுக்ஜீத் சிங் (41வது நிமிடம்), குர்ஜந்த் சிங் (44 வது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். 13வது ஆட்டத்தில் ஆடிய இந்தியா 24 புள்ளிகளுடன் 3வது இடத்தில் உள்ளது. நெதர்லாந்து அணி 12 ஆட்டங்களில் ஆடி 26 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அர்ஜென்டினா அணி 14 ஆடங்களில் ஆடி 26 புள்ளிகளுடன் 2வது இடத்திலும் இருக்கின்றன. இன்று நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

## தைவான் ஓபன் தடகளம்: ஈட்டி எறிதலில் மானு தங்கம் வென்றார்



தைவான் ஓபன் தடகள போட்டி அந்த நாட்டில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் ஆசிய சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீரரான டி.பி. மானு 6வது மற்றும் கடைசி வாய்ப்பில் 81.58 மீட்டர் தூரம் எறிந்து தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

கர்நாடகாவை சேர்ந்த 24 வயது மானு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதி இலக்கை (85.50 மீட்டர்) எட்டிப்பிடிக்காததால் இன்னும் தகுதி பெறவில்லை. அவரது சிறந்த ஈட்டி எறிதலான 84.35 மீட்டர் தூரத்தை கூட அவர் நெருங்கவில்லை. பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு ஒலிம்பிக் மற்றும் உலக சாம்பியனான நீரஜ் சோப்ரா, கிஷோர் ஜெனா ஆகியோர் இந்தியா சார்பில் ஏற்கனவே தகுதி பெற்று இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றம்உடுப்பதூஉம்**
**உண்பதூஉ மின்றிக் கெடும்**

**விளக்கம்:**
பிறர்க்கு உதவியாகக் கொடுக்கப்படும் பொருளைக் கண்டு பொறாமைப்படுகின்றவனுடைய சுற்றம், உடையும் உணவும் இல்லாமல் கெடும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.